உ

கடவுள் துணை.

அருணாசலேசுரர்பதிகம்.

உண்ணாமுலையம்மன்பதிகம்

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

44

கடவுள் துணை.

திருவண்ணாமலை
அருணாசலேசுரர்பதிகம்.

——(*)——

காப்பு - வெண்பா.

கண்ணனும்வண்ணக் கமலனுங்காண்டற்கரிய
அண்ணாமலையாரடிமீதி-லெண்ணார்
துதியுரைக்கநாளுந் துணையாயன்பர்க்குக்
கதியளிக்குந் தும்பிமுகன்காப்பு.

ஆசிரியவிருத்தம்.

நினைவாகிமூல நிலையாகி நேச நிஜரூபமானவடிவே மனமாய்மைமூடி யறிவேகலங்கி மனமுந்தியங்கி வெகுவாய், இனமோடிருந்து அவதீமிலேந்து எமதூதரோடிவருமுன், மனவேகமாக அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே. (௧)

கயிலாயமேறு யதிலாறுவீடு கரைகண்டதில்லையொருவர், வெயிலானஜோதிவிளையாடும்வீதி வெளிமாய்கை யேதுமறியேன், பயிலான கொம்பின் பகர்காயுமாகி பழமாயுதிர்ந்துவிழுமுன், மயிலாடுசோலை அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே. (௨)

நதியோடுதும்பைமுடிமீதணிந்து நலமானவெள்ளை விடைமேல், பதியாயிருந்துஉமைபாதிகொண்ட பரனே யுன் நாமமறவேன், விதியாதனைவ வெமதூதர் வந்து வெகுவாதை செய்துவிடுமுன், மதியேபுனைந்த அருணா சலேசர் வரவேண்டுமென்றனருகே. (௯)

உற்றாருமில்லையுறவில்லை யாருமுறைசொல்லியொ ப்பிவரவே, பெற்றாருமில்லை மறைதேடுகின்ற பிரானே யுன் நாமமறவேன், கற்றாருமேற்ற வடியாரருந்து கனி யாயமர்ந்த கனியே, மற்றாருமில்லை அருணாசலேசர் வர வேண்டுமென்றனருகே. (௰)

கொங்கைக்குரும்பைமுலைமாதராசை கொடிதான மோகமதனாற், சங்கற்பமொன்று மறியாமல்வீணில் தடு மாறி யாவிவிடுமுன், திங்கட்கொழுந்து முடிமீதணிந்த சிவனேயுன் நாமமறவேன், மங்கைக்கிரங்கும் அருணாச லேசர் வரவேண்டுமென்றனருகே. (௧௧)

உருவானகாயமதிலா றுவீடு உதிரங்கலந்தவுடலும், கருவாகிநின்று புவிமீதில்வந்து கபடேது மொன்றுமறி யேன், குருவாகிநின்ற சிவஞானஜோதி குருவேநின் நாமமறவேன், மருவீசுசோலை அருணாசலேசர் வரவே ண்டுமென்றனருகே. (௧௨)

பணியாதகோயி லணியாதநீறு பசியாதசோறுதரு வாய், துணியானவாசி சிவஞானமோன சுகமேயெனக் கருள்செயாய், தணியாதகோப முடலோ டிருந்து சலி யாதமாய்கைவெளியே, மணியாநோதர் அருணாசலேசர் வரவேண்டுமென் றனருகே. (௭)

சூதாடிநின்ற சிவசூத்திரங்கள் சுழுவாயமர்ந்தசுழி யே, பாதாதிகேச முடலோடிருந்து பாடுகானிலாடுநட னம், வேதாவுமாட மதியாட மூவர் விளையாடிநின்றவெ ளியே, வாதாடிநின்ற அருணாசலேசர் வரவேண்டுமெ ன்றனருகே. (௮)

அடிமூலவட்ட மதிலாற திட்ட மதிமேலிருந்த பர னே, துடியானசத்திசிவரூபவல்லிசுகமானவேதவடிவே, அடியாருளத்தில் தெளிவாய்விளங்கு மரனேநின் நாமம றவேன், வடிவானஜோதி அருணாசலேசர் வரவேண்டு மென்றனருகே. (௯)

கல்லாலிநீழ லினிநால்வர்முன்பு காணுதயோகநிலை யைச், சொல்லாது சொன்ன மெய்ஞ்ஞானமூர்த்தி சுட ராயிலங்குமரசே, வல்லாளமன்ன னருமைமைந்தனுகி வரு ஞானமானவடிவே, வல்லானுகந்த அருணாசலேசர் வர வேண்டுமென் றனருகே. (௰)

உரைதங்கிநின்ற வுயிரெங்குமாகி யுலகெங்குமேகவடிவாய், கரைகண்டதில்லை வெகுகோடிகாலை கலிகாலமாய்கையதனால், இரைதேடிடாசைபசியாமல்மெலிந்துஇருகண்டியங்கிவிழுமுன், வரைதங்கிநின்ற அருணாசலேசர் வரவேண்டுமென்றனருகே. (கக)

கட்டளைக்கலித்துறை.

கண்மணியே யைங்கரக்களிற்றைதருகு காதலியாம்
பெண்மணியே புறக்காடுறை பேய்மணியே பிறக்குந்
திண்மணியே யன்பர்டீவினைபோக்குந் திதிமணியே
விண்மணியே திருவண்ணாமலைதிகழ் வேதியனே.

அருணாசலேசுரர்பதிகம்-முற்றிற்று.

திருவண்ணாமலை

உண்ணாமுலையம்மன் பதிகம்.

———(*)———

காப்பு - வெண்பா

ஓங்குபெரும் யாருதவு முண்ணாமுலை யவண்மேற்
பாங்குபெருஞ் செந்தமிழிற் பாவுரைக்க-நீங்கரிய
வெந்துயரெலாம்போக்கும் வேழமுகன் செய்யதிருக்
கந்தமலர்ச் செஞ்சரணங் காப்பு.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்ட வாழிமிசை பள்ளிகொண்டதிருமாலு முண்டகமிடை, யூர்கொண்ட நான்கு முகனும் பரந்து வுடைகொண்ட சிந்தையொடுதே, பேர்கொண்டவன்னி மலைநாதர்நாம மிழைகொண்ட மின்னலிடையாய், வார் கொண்ட வுண்ணாமுலை நாமதேவி வரவேண்டு மென்ற னருகே. (க)

நறவாருடம்பு வனசம் பிறங்கு நனிவாவிசூழுமிள வெண், பிறைநீடுசெஞ்சா டவிகண்டனுறு பெருகுஞ் சிறந்தவெழிலார், நிறையோடுநின்ற கிரியும்விளங்க நிலை வாமவாலை நெடுநாண், மறைதேடு முண்ணாமுலை நாம தேவி வரவேண்டுமென்றனருகே. (உ)

கலையாய்மிலைந்த விரிநீருடுத்த கவினார்புவிப் பெண வளொண், டலையாய்விளங்கி பணவாதிசேடசயனஞ்சிர ங்க ஞெளிருஞ், சிலையாய்நீவந்த தனிஞானதீப சிகை கொண்டளாவுநெடிய, மலைமேவுமுண்ணாமுலைநாமதேவி வரவேண்டுமென்றனருகே. (ங)

பொன்னிற்பறந்த புவியிற்பொருந்து புளகுற்றமா தர்மபலிற், சென்னிக்கண்வைத்து மருள்வேனை பொய் யில்திரிவேனை சற்றுமிளகாக், கொன்னைச் சொலேனை கொடுமைக்குளேனை குறைதீர வுன்கணருளான், மன் னிக்கு முண்ணாமுலை நாமதேவி வரவேண்டு மென்ற னருகே. (ச)

எந்தாய்விணின்க ணிமையோர்பராவு மிமயந்தரும்-பெணுமையென், சிந்தாகுலங்க ளடியோடகழ்ந்து சித றும்படிச்செய்திருவன், பந்தானரும்பியடியேனுளத்தை பருகும் பசுங்கிளி யென்முன், வந்தாள்க வுண்ணாமுலை நாமதேவி வரவேண்டுமென்றனருகே. (சு)

சற்றுகினும்மு ளுடையாவுலுத்தர் சமுகத்திலேகி கவிபாடித், தாழ்வுறுமலினையும்புயங்களெனுநின்சரண்க ணெளியேன், வித்தாரமானதமிழ்பாடிஞான விறல்மேவ வைத்திடுபோல், வற்றுதவுண்ணாமுலைநாமதேவி வரவே ண்டுமென்றனருகே. (சு)

அயனுவினுங்க ணரிமார்பினுஞ் சேவரனுர்மருங்கு முடலி, னயனுர விந்தமொரு வாயிரங்கணகுமிந்திரன்ற னுழியும், உயுமண்பிலங்கொ ளுயிர்தோறுநிற்ற னுரு தேஜசன்றியுளவோ, மயமாது வுண்ணாமுலை நாமதேவி வரவேண்டுமென்றனருகே. (எ)

கருவீடுதேகமதிலாறுமானகடைவீடுமுச்சிநடுவிற் பெருவீடுகாட்சி மணல்வீடுகட்டு பிசியேநடுக்கவசமோ, எரிவீடெனச்சொல் இடுகாடுபோமு னெளியேன்முனே கிவருவாய், மருவீடு முண்ணாமுலைநாமதேவி வரவேண் டுமென்றனருகே. (அ)

அரவுண்டநஞ்சமதுதீரவெண்பு மருமங்கையாகிவ ரவும், பெருநீரி வோலையெதி ரேறமா றன்பிணியானவெ ப்பகலவும், திருவார்ந்தஞான வமுதங்கறந்து சீர்காழிய ர்க்குதவவே, வருவிசெல்வி யுண்ணாமுலை நாமதேவி வர வேண்டுமென்றனருகே. (கூ)

சுழியூடெழுந்தவழல் சோதிநீடு துறைகண்டுவுண் னுமறிவை, யிழைவாடுகின்ற வெனையாரெனச் சொலி டுவேனெனவைக்குமுறவாம், ஒழிவாடுமோன தனிஞானி யானவுமையேதிணீலமிடறேன், வழிபாடுமுண்ணாமுலை நாமதேவி வரவேண்டுமென்றனருகே. (ய)

அதிகத்துயர்க்குள் பதையெற்குமை அசனத்தை யன்றியிலையிப், பதிகத்தைநிற்சரண பங்கயத்தில்பரிவுற் றுரைக்கு மெனையாள், ததியெத்ததிச்சொல் ததியைத்த ரும் முத்தமியேபரைப்பெணுமையே, மதிசத்தியுண்ணா முலைநாமதேவி வரவேண்டுமென்றனருகே. (கக)

கட்டளைக்கலித்துறை.

நாயகியேபொற்சுணங்குடற் பைத்தலைநச்செயிற்று
வாயதிமேற்றுயில்வோனருஞ் சோதரியேமலர்க்கண்
மயகமா நுதலாம்பிறையாய் நின்றன்சேவடியிச்
சேயகத்தேவைத்திடுதி யுண்ணாமுலைசிற்பரியே.

உண்ணாமுலையம்மன்பதிகம் - முற்றிற்று.